பொய் சொல்லக் கூடாது என்று ஔவகைக்கிழவி பாடினாள். கூழந்தகைளை பொய் சொல்லக் கூடாது என்று பாடிய அவள் இன்றகைக்கு ஏழு கழுதை வயதில் சிதம்பரம் சொல்லும் பொய்களிற்கு கையிலிருக்கும் தடியால் சிதம்பரத்தின் மண்டயைபை பிளந்திருப்பாள். இந்தியாவின் நிதியமசைச்சர், இலங்கதை் தமிழ்மக்களின் இனப்படுகொலை நடந்தபோது உள்துறை அமசைச்சராக இருந்த மாண்புமிகுவின் பச்சைப்பொய்யபை் பாருங்கள்.

"இறுதிக் கட்டப்போரின் போது இந்தியாவின் பசேச்சகை் கடேிருந்தால் பிரபாகரன் உயிரோடிருந்திருப்பார் என இந்திய மதத்திய நிதியமசைச்சர் ப.சிதம்பரம் தரெிவித்துள்ளார். 'பூதிய தலமைுறை' தொலகைகாட்சி நிகழ்ச்சி ஒன்றில் உரயைாற்றுகயைிலயேே அவர் இவ்வாறு தரெிவித்துள்ளார். போரை நிறுத்துமாறு இந்தியா இரு தரப்பினரிடமும் வணேிடுகளோ் விடுத்த போதிலும் இரண்டு தரப்பினரும் அதற்கு ஓப்புக்கொள்ளவில்லை. போரை நிறுத்தச் சொல்லி பிரபாகரனிடம் இந்திய அரசாங்கம் எவ்வளவு சொல்லியும் கடசைிவரை அவர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதனால்தான் அவர் மரணமடயை நரேிட்டது. இந்தியா சொன்னதகை் கடேிருந்தால் இன்றகைக்கு பிரபாகரன் உயிரோடு இருந்திருப்பார்" என்று சிதம்பரம் கூறினார்.

போரை நிறுத்துமாறு இந்திய அரசாங்கம் இரண்டு தரப்பினரிடமும் வணேிடுகளோ் விடுத்ததாம். "Be careful" என்று வடிவலேே தனக்கு தானே சொன்ன மாதிரி போரை நிறுத்தச் சொல்லி உங்களிற்கு நீ ங்களே அல்லவா சொல்லியிருக்க வணேிடும்.

ஏனனெ்றால் இந்தியாவின் பாரேரை நாங்கள் நடத்தினாேம் என்று இலங்கையின் கொலைகாரர்கள் பகிரங்கமாக சொல்லியிருக்கிறார்களே. அவர்கள் சொன்னதை இந்தியா என்றைக்கும் மறுத்ததில்லையே. இன்றைக்கு தரே்தல் வரப்பாேகுது என்றவுடன் அப்பாவி பாேல முகத்தை வதை்துக் கொண்டு காங்கிரசின் இரத்தம் தாேய்ந்த கைகளை மறைக்கப் பார்க்கிறார்கள். இனப்படுகொலைக்குப் பிறகு அய்க்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக தீ ர்மானம் கொண்டு வரப்பட்ட பாேதெலெ்லாம் இலங்கை அரசகை் கண்டித்து பயெரளவிற்கு க□ட ஓரு வரி வந்து விடக்க□டாது என்று பின்னங்கால் பிடரியிலே பட சுடுதண்ணி கூடிச்ச நாய் மாதிரி என்ன ஓட்டம் ஓடினார்கள்.

இவர் சொன்னது பாேல பிரபாகரனாே, புலிகளாே இவர்களது பசே்சகை் கடே்கவில்லை என்றே வதை்துக் கொள்வாேம். வன்னியிலே கொல்லப்பட்ட அத்தனை ஆயிரம் மக்களும் என்ன பாவம் சயெ்தார்கள். புலிகளை விட்டு விட்டு தமிழ்மக்களை காப்பாற்ற உலகின் மிகப் பரெிய வல்லரசுகளில் ஒன்றான இந்தியாவால் ஏன் முடியாமல் பாேய் விட்டது. பாகிஸ்தானுடன் சண்டை பிடித்து வங்கதசேத்தை பிரிக்க முடிந்தவர்களிற்கு தமிழ்மக்கள் கொல்லப்பட்டதை ஏன் தடுக்க முடியாமல் பாேய்விட்டது.

காஸ்மீ ர், அசாம், நாகலாந்து, மணிப்□ர் என்று சிறுபான்மை தசேிய இனங்களை ஒடுக்குகிறார்கள். தமது வாழ்வாதாரங்களை அழிக்கும் பரெுமுதலாளிகளிற்கு எதிராகப் பாேராடும் ஏழமைக்களை கொன்று குவிக்கிறார்கள். தமது சொந்தநாட்டு மக்களையே கொன்று குவிக்கும் இவர்கள் பிரபாகரனிற்காகவும் இலங்கதை்தமிழ் மக்களிற்காகவும் கவலைப்படுகிறார்களாம். ஏற்கனவே ஓரு முறை ராஜீ வ்காந்தி இலங்கதை்தமிழ் மக்களிற்காக கவலைப்பட்டதால் மக்கள் பட்டபாடு எத்தனை தலைமுறைக்கும் மறக்காது. இந்திய அமதைிப்படை வந்து விட்டது இனி வாழ்வு பாேரின்றி அமதைியாக இருக்கும் என்று மாலை பாேட்டு மகிழ்ந்து வரவறே்ற அப்பாவி மக்களை துடிக்க துடிக்க கொன்ற கொலைகாரர்கள் கவலைப்படுகிறார்களாம்.

இலங்கதை் தமிழ்மக்களிற்காக கவலைப்பட்டு முடித்து விட்டு தமிழ்நாட்டு கடல் தொழிலாளர்களிற்காக மனம் உருகி அவர் உதிர்க்கும் அடுத்த முத்தை பாருங்கள்.

"மீனவர்கள் பிரச்சினையில் உள்ள சிக்கல்களை தீர்க்கவும், இரு தரப்பு மீனவர்களையும் அழைத்துப் பேசவும் இந்திய அரசு தயாராகவே உள்ளது. ஆனால், தமிழக அரசு அதற்கு தயாராகவில்லை. அதற்கான திகதியை இன்னமும் கூறிப்பிடவில்லை" என்றும் சிதம்பரம் தெரிவித்தார். இலங்கையின் கரைகளிற்கு தமிழ்நாட்டு கடற்தொழிலாளர்கள் யாத்தம் செய்யவா போனார்கள். சிலர் எல்லை தெரியாமல் போனார்கள். சிலர் படகுமுதலாளிகளின் பணவெறியினால் போக வைக்கப்பட்டார்கள். காத்திருப்பது மரணம் என்று தெரிந்தும் கூடும்பத்தின் பசிக்கு வழி தேடிப்போனார்கள். அவர்கள் கைகளில் வலை தானே இருந்தது. ஆயுதமா இருந்தது. எதற்காக இலங்கை கடற்படை அவர்களைக் கொல்ல வேண்டும். எதற்காக அவர்களை சித்திரவதை செய்ய வேண்டும்.

அமெரிக்க தூதரக அதிகாரி தேவயானி விடயத்தில் மின்னலாக வலைபோர்த்தீர்களே. அதுவும் உங்களது எசமான், காலடி மண்ணெடுத்து தினமும் வணங்கும் அமெரிக்க எசமானையே ஓரு கை பார்க்கப் போவதாக சவுண்டு விட்டீர்களே. தேவயானிக்கும் இந்த கடற்தொழிலாளர்களிற்கும் என்ன வித்தியாசம். அவர் அதிகாரி, இவர்கள் ஏழைத்தொழிலாளர்கள். இவர்களினது உயிர்களிற்கு உங்களது கணக்கூப்பு தகங்களில் எந்த வித மதிப்புமில்லை என்பதுதானே வித்தியாசம். ஏழைகள் கொல்லப்படுவது கூறித்து இவர்கள் ஏன் கவலைப்படப் போகிறார்கள். தமிழக அரசை கூறை சொல்கிறார். காங்கிஸ் கள்ளர்கள் ஆட்சி செய்யாத மாநிலங்களை எல்லாம் நினைத்தவுடன் கலைக்கும் இவர்கள் கடற்தொழிலாளார்களின் பிரச்சனைகளிற்கு தீர்வு காண தமிழக அரசு திகதி கிடைக்கும் வரை பார்த்துக் கொண்டிருப்பார்களாம். கடலிலே இலங்கை கடற்படை அட்டூழியம் செய்தால் கடற்கரையிலே தாதுமணல் கொள்ளையன் வைகுண்டராசன் சூழலை நாசமாக்குகிறான். அவனிற்கு பரிசும் பாதுகாப்பும் கொடுக்கும் இவர்களா இலங்கை அரசை தட்டிக் கேட்க போகிறார்கள்.

மிகப் பெரிய வல்லரசின் நிதியமைச்சர் சொல்கிறார். "நாங்கள் சொல்வதை பிரபாகரனும் கேட்கவில்லை. இலங்கையரசும் கேட் கவில்லை. தமிழக அரசும் கேட்குதில்லை". பாவம், எதற்கும் வீட்டுக்குப் போய் உங்க வீட்டு நாயாவது நீங்க சொல்லுறதை கேக்குதா என்று சரி பார்த்துக் கொள்ளுங்கள்.